**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE,
KODAVASAL

| | | |
|---|---|---|
| Case No. | : | **C.C. No.142/2025** |
| Prosecution witness | : | P.W.2 |
| Name | : | கலா |
| Father's /Husband Name | : | பன்னீர்செல்வம் |
| Village | : | ஆழியன் தோப்பு |
| Taluk | : | குடவாசல் |
| Age | : | 40 |
| Occupation | : | வீட்டுக்குடித்தனம் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873, 16th day of February 2026.
Accused present.

**சாட்சி மனுவின் பேரில் குவிமுச 311ன் கீழ் மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை**

ஆஜர் எதிரியும் நானும் நெருங்கிய உறவினர்கள் என்றால் சரிதான். எனக்கும் ஆஜர் எதிரிக்கும் நீண்ட நாட்களாக இடம் சம்மந்தமான பிரச்சனை இருந்தது என்றால் சரிதான். எனது கொழுந்தனார் மகள் காவல் துறையில் பணியாற்றி வருகிறார் என்றால் சரிதான். காவல் துறையில் பணியாற்றும் பெண்மணியால் எங்களுக்கு எந்த பிரச்சனையும் கிடையாது என்றால் சரிதான். எதிரி வீட்டு கொல்லைக்குள் அ.சா.1 அத்துமீறி நுழைந்த போது ஏன் என் கொல்லைக்குள் வருகிறீர்கள் என்று கேட்டதால் கோபமுற்று கீழே கிடந்த முள் தாங்கி கட்டையை எதிரியை தாக்க முயன்ற போது அவர்கள் தடுத்ததால் அ.சா.1க்கு காயம் ஏற்பட்டது என்றால் சரியல்ல. எதிரி கொடுத்த புகாரின் பேரில் நானும் என் கணவர் அ.சா.1ம் எதிரியாக சேர்க்கப்பட்டு அவ்வழக்கிற்கு முன் ஜாமீன் பெற்றோமா என்றால் இல்லை. எதிரி சம்பவம் நடந்த நாளன்று கும்பகோணம் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எதிரிக்கு ஏற்பட்ட காயத்தினை பொறுத்து போலீசார் விசாரித்தார்களா என்றால் இல்லை. எதிரி கொடுத்த புகார் சம்மந்தமாக போலீசார் விசாரித்தார்களா என்றால் விசாரித்தார்கள். எதிரிக்கு ஏற்பட்ட காயத்திற்கு

கும்பகோணம் மருத்துமனையில் சிகிச்சை பெற்று அவர்கள் கொடுத்த புகாரிலிருந்து தப்பிப்பதற்காக பின்னால் இந்த வழக்கு அ.சா.1ல் ஜோடிக்கப்பட்டது என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை</u>**

இல்லை.

Taken down by the typist under my dictation in open Court read over to the witness admitted and acknowledged by him to be Correct.

MOHAMED ARSHAD FAREED M

Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
DN: cn=MOHAMED ARSHAD FAREED M, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.02.16 10:50:29 +0530

District Munsif -Cum-
Judicial Magistrate,
Kodavasal.

`